சிவமயம்



பனை பெரியபனையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

திருமதி. சிறிகரன் கனகாம்பிகை (வாணி)
எழுதுநர் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த 90ம் நாள்

# நினைவு மலர்

31-05-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பளை பெரிய பளையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## திருமதி. சிறிகரன் கனகாம்பிகை (வாணி)

எழுதுநர் பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ.சங்கம்
அவர்களின் சிவபதப் பேறு குறித்த 90ம் நாள்

# நினைவுமலர்

31-05-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பிள்ளையார் துணை.

# சமர்ப்பணம்

பச்சிலைப் பள்ளியில் உள்ள பெரிய பளை என்னும் இடத்தில் கந்தசாமி, மனோன்மணி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியாக அவதரித்து சிறுவயதில் இருந்து பலவகைச் சிறப்புக்களுடனும் துடுக்குத்தனமாக சிரித்து உறவாடிய எமது அன்புத் தெய்வம் அமரர் திருமதி சிறிகரன் கனகாம்பிகை (வாணி) அவர்களின் நினைவுகளை சுமந்த இம் மலரினை அவர் தினமும் வழிபட்டுவந்த இரட்டைக் கேணி அம்மன் பாதக் கமலங்களுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சுபம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாடல்கள்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கை கூடும்- செஞ்சொல்
பெருவாக்கும் வீடும் பெருக்கும்
உருவாக்கும் ஆதலினால் வானோரும்
ஆனை முகத்தானைக் கூப்புவர் கை.

## பளை இரட்டைக் கேணி அம்பாள் துதி.

செங்கமல இருவாவி செறி பளை மத்தியின் தாயே
கேட்டவரம் தந்தருளும் அருளாட்சி நாயகியே
பாரினுள் அவதரித்த பாலகர் யாவரையும் காத்தருள
இரட்டைக்கேணித் தாயே வேண்டுகின்றோம் உம்
திருவடிகள்.

## தேவாரம்.

மங்கையற் கரசி வளர் கோன் பாவை
வரிவளைக் கைமட மானி
பங்கையற் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள் தோறும் பரவ
பொங்கழலுருவன் வேத நாயகன் பால்
வேதமும் பொருள்களுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த
ஆலவாயாவது மிதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே
பொம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தனைப் புலையேனேன் உனக்குச்
செம்மையே யாய சிவமதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுற் தருளுவதினியே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்ஙனே பெரிய நீசிறிய
என்னை யான் விரும்பி என் மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மாலறியா ஒருவனாம் இருவர்
முக்கணா நாற்பெரும் தடந்தோன்
கன்னலே தேனே அமுதமுமே கங்கை
கொண்ட சோனேச்சாத் தானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறிவும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருப்புராணம்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேன் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்கு என்றார்.

# வாழ்த்துப் பா

வான்முகில் வளாது பெய்க வலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவன் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பணி செய்து நற்கதி அடைந்த அமரர் திருமதி சிறீகரன் கனகாம்பிகை (வாணி) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு.

நில மடந்தையின் திலகமென விழங்குவது நம் ஈழமணித் திருநாடு அதில் தமிழர்கள் செறிந்து வாழும் யாழ் குடா நாட்டையும், வன்னிப் பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் பாலமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளிப் பிரதேசமாகும். இதில் நீர், நிலம், நெல், பனை, தென்னை நிறைந்த பசுமையான போர்வையை உடையது பெரியபளைக் கிராமமாகும். கல்வி, செல்வம், வேதம் மூன்றும் நிறைந்த இக் கிராமத்திலே பாரம்பரியமாக வர்த்தகத் தொழிலினை மேற்கொள்பவரும். இரட்டைக் கேணி அம்மனுக்குத் தொண்டு செய்பவருமாகிய கந்தசாமிக்கும் அவர் தம் மனைவியாகிய மனோன்மணிக்கும் சிரேஸ்ட புத்திரியாக 31-12-1973ல் அமரர் கனகாம்பிகை (வாணி) அவர்கள் பிறந்தார். இவர் தன் உடன் பிறந்த சகோதரி அனுஷாம்பிகை (ஆசிரியை),சகோதரன் சபேசன் ஆகிய இருவருடனும் தாய் தந்தை ஆதரவுடன் செல்லமாக வளந்து வந்தார். இவ்வாறு வளந்த இவர் தனது ஆரம்பக்கல்வி முதல் க.பொ.த (உ/ த) வரை பளைமத்திய கல்லூரியில் கற்றுத் தேர்ச்சி பெற்றார். கல்லூரி வாழ்க்கையில் மற்றவர்களுடன் இனிமையாக பழகும் சுபாவமும், சிரித்த வதனமும், எல்லோரிடமும் அன்புடனும் பண்புடனும் பழகி கல்வியில் முதல் மாணவராகத் திகழ்ந்தார். கல்லூரி வரலாற்றில் பொதுப்பணி மன்றங்களிலும் விளையாட்டுத் திடல்களிலும் சாதனை படைத்த இவர் க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று வெளியேறினார். தனது தகுதிக்கும் தகைமைக்கும் ஏற்றதாக 1994ம் ஆண்டு காலப் பகுதியில் பளை கோட்டக் கல்வி அலுவலகத்தில் எழுதுவினைஞராக சேவையாற்றினான். பின்னர் தனது நிரந்தரசேவையைத் தொடர்வதற்காக 01-08-1995இல் பளை பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ சங்கத்தில் தன்னை இணைத்து பதின் மூன்று ஆண்டுகளாக மக்களுக்கு சேவையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் ரம்சி இரங்கல்

பசித்த என்வயிற்றுக்கு வாய்ருசித்த பாலருந்தப்
பார்த்திருப்பேன் தாயே
சிரித்த முகத்துடன் வந்தனைத்து, வார்த்தைகள்
கேட்டு பசிதீர்ப்பாய் தாயே
கண்கள் யாவும் தூங்கும் வேளை
என்னை முத்தமிட்டுச் செல்வாயே
அண்ணாவுடன் உறங்கும் வேளை
அருகில்வந்து அனைத்துச் செல்வாயே!

கள்ளக் குட்டி என்றே கூறும் நீ
கள்ளமாக ஒரு தடவை வருாயோ
காண்பது எனிக் கனவென்றால்
அதில் ஒருதடவை கட்டியனைப்பாயோ
பசியுடன் பாலருந்த
பார்த்திருக்கும் பாவியெனை
பார்த்துப் போக ஒரு தரம் வந்து நீ செல்வாயோ.

# தாய், தந்தை இரங்கல்

ஐயிரு திங்கள் உனைச் சுமந்து பெற்றோம்
அன்பொடு உனக்கு கனகாம்பிகை என நாமமிட்டோம்.
எம் மடிமீது உனைக்கண்டு, கனவுகள் பல நாம் கண்டோம்
கண்டதெல்லாம் நனவாக நாம் மகிழ்ந்தோம்.

மணக்கோலமதில் கண்ட காட்சி மலை போல் மனதிலிருக்க
பிணக்கோலம் கொள்வாயென நாமறியோம்.
பேரன் பேத்தியர் கண்டு பேரானந்தம் கொண்டிருக்க
பேராபத்தில் மாண்டு மடிவாயென நாமறியோம்.

முதிர்வு எமைவாட்ட முண்டு நீ கொடுப்பாயென நாமிருந்தோம்
எதிர்வு கூறியே எதிர்பார்த்து நாமிருக்க ஏமாற்றி சென்றதெங்கே.
அதிர்வு கொண்டதோர் செய்தி கேட்டு அலறி அடித்து நாம் வந்தோம்.
உதிர்வு கொண்டாய் என்றுரைக்க உமையாகினோம் நாம் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர், சகோதரி இரங்கல்

அக்கா என்றழைக்கக் கிடைத்த அருமைச் சோதரியே
மீண்டும் ஒன்றாகி மூவரும் சிரித்து மகிழ்ந்திடவே
விண்ணை விட்டு வருவாயே எம் அன்பு அக்காவே
கண்ணில் ஒருதரம் வந்து கனவிலாவது காட்சி
தருவாயே அக்கா.

ஆசைக்கோர் அக்கா அருமைக்கோர் தம்பி என்று அன்புடன்
பெருமை கொண்டு நானிருந்தேன்.
அக்கா என அழைத்த நாவும், இசைத்த ஒலியும்
அடங்கியதே
அன்பான என்பிள்ளை பெரியம்மா எனும் பெருமையிழந்தான்
அன்போடு உன் பிள்ளைகளுடன் அவனை வளர்த்திடுவேன்

மூத்த நற் சோதரியே அக்கா வடிவில் வந்த அன்னையே
தம்பி என்றழைத்த உன்னோசை தனைத் தேடுகின்றேன்
அருகில் வந்தொருதடவை ஆறுதல் கூறிச் செல்வாயோ
வெம்பியழும் உன் தம்பியருகே வந்தெருமுறை செல்வாயோ
கை கூப்பியே அம்மன் அடிசேர வேண்டுகிறோம் என்நாளும்.

## மாமியார் புலம்பல்

மருமகளேயல்லாது மகளே எண்றெண்ணினேன்
மாமி நான்மரணிக்க நீங்கள் கண்டகனா
தேவியே உமையழிக்குமென எண்ணவில்லை
என்னருமை மகனுக்கு அன்பான துணைவி யென்று
நானிருக்க நமை ஏமாற்றிச் சென்றதெங்கே.

காதோரம் வந்த சேதி கனவென்றே நான் விழித்தேன். காத
தூரம் சென்றதெங்கே
எனைக் காட்டி எமன் உங்களை கொண்டு சென்றதெங்கே
ஏற்கிதில்லை இயலாவயதில் என்னிதயம்
பாதை மூடியபடியால் பாவியேன் பார்க்க முடியவில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துணிமார், மைத்துணர் இரங்கல்

வஞ்சமில்லா மலர் வதனம் கொண்ட வாணியே
நெஞ்ச மெல்லாம் நீக்கமற நிறைந்த மைத்துணியே
கொஞ்சக் காலமே பழகிப் பிரிந்து நீங்கள் சென்றாலும்
பஞ்சமில்லையிங் பாசத்திற்கு என்றிருந்தோம்
அஞ்சவைத்து அதிரவைத்து நீங்கள் சென்ற தெங்கே!

எமதருமைத் தம்பியை மகிழ்தேற்ற மச்சாளே
ஏக புத்திரன் எம் தம்பிக்கு ஏற்றதாயமைத்த மைத்துணியே
எடுத்த வாழ்வு ஏற்றமுடன் சிறந்து விளங்கியதுவே
ஏட்டில் எழுதிய வாழ்வு என நாம் அறியோம்
எமன் எண்ணங் கொண்டதனால் ஏதினையோ விண்ணுலகம்.

# பச்சிலைப் பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாட்கள் இரங்கல்

பசியால் நலிந்தவரைக் காப்பதெங்கள் நோக்கமெனக் கொண்ட
தொழிலதனை சிறப்பாய்
நீயும் செய்துயர்ந்தாய் நீண்ட காலம்
நின்பணி நீக்கமறச் செய்துவருங் காலத்தில்
பஸ்சின் பயணமே யமனாக வந்து
மறைந்த நீங்கள் நம் மனதில் உன் உருவைப் பதியவைத்தாய்.

உன் இதயத்துடிப்புநின்று நீங்கள் மறைந்தாலும்
சிரித்த வதனமும், செம்மையான பேச்சும்நின்
திருவுருவமும் என்றும் எம்மனக்கண்ணில் நின்றிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர் இரங்கல்.

உற்ற உறவு ஒன்று
உதிர்ந்து போனதொன்று
பெற்ற பிள்ளைகளும் - நற்
துணைக் கணவரும் பெற்றாரும்
உற்ற சகோதரர்களும்
பேரதிர்ச்சி கொண்டு வாடி அழ
சுற்ற மெல்லாம் கதறி அழ
சுருக்கமாய் நீ சென்றனையோ
பற்றுக்கள் எல்லாம் துறந்து
பரலோகம் விரைந்தனையோ
கூட்டுறவோடு நாட்டுயர்விற்கு
நற்பணி செய்து அப்பணியே
தெய்வம் எனப் போற்றி நின்றாய்
பெற்ற குழந்தைகளை பெருமையுடன் வளர்ந்து
கற்றாங்கு ஒழுக வைத்து
கருத்துடனே சபையேற்றி
நற் தவத்தின் சிறப்புடனே
நலம் பெறவே வாழவைப்பாய்
என்றெண்ணி நாமிருக்க
பெற்றோம் இடியென பேரிழப்பில்
துடித்தவர் இங்கிருக்க
அவனியில் முப்பத்து நான்காண்டு வாழ்ந்து
உறுதுணையாய் நின் றொளிந்தாய்
நல் ஆத்மா சாந்தி பெறவே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## தேற்றம்

நீர்க் குமிழியே வாழ்க்கை நிலைப்பதில்லை இங்கிதுன்மை
யார்க்குமிறப்புண்டே வரும் ஆவி துறப்பாரொருநாள்
ஆர்க்குமிது தெரியுமிது ஆதலினால் உயிரிழந்த
பேர்க்குரிய ஆன்மா நலம்பெற இறைவனை
தொழில்முறையே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிறவிப் பெருங்கடல் நீந்தினார்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்- நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்பது பொய்யாப் புலவர் வாக்காகும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதற்கிணங்க வாழ வேண்டிய நெறியில் வாழ்ந்து இறைவனிடம் சங்கமமாகியவர் அமரர் கனகாம்பிகை சிறிகரன் ஆவார். பிறவித் துன்பத்துள் உழலாது நிந்திய வாழ்க்கைக்குள் சங்கமமாகிய ஒருவராகவே அவரைப் பார்க்கின்றோம்.

பெரிய பளை, பளையை சொந்த இடமாகக் கொண்ட அமரர் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் இடம் பெயர்ந்து தனது மாமனார் வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்த போது இடியென வந்த செய்தி யாவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியது. தனது சேவையைத் தொடர்வதற்காக பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் எழுதுநராக தன்னை இணைத்துக் கொண்டவர். தானுண்டு தன்பணியுண்டு என வாழ்ந்து சகல பணியாளராலும் வாணி என செல்லமாக அழைக்கப்பட்டவர்.

யான் பளை மத்திய கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் எனது மாணவியாக இருந்தவர் மட்டுமல்ல நானும் அவரும் ஒரே ஊரவர்கள் பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலய ஸ்தாபகரும் தர்மகர்தாவாகவும் விளங்கிய அமரர் செல்லத்துரையின் பேர்த்தியுமாவார். நீண்ட தொண்மை மிக்க ஆண்மீகப் பரம்பரையில் தோன்றியவர். அம்பாள் ஆலய வருடாந்த உற்சவங்களிலும். விசேட பூசை தினங்களிலும் ஆலயத்திற்கு வரும் அடியார்களை உபசரிப்பதிலும் யாவருடைய மனங்களிலும் இடம் பிடித்தவர். அத்தகைய ஆற்றல் பொருந்திய வாணியை இவ்வளவு விரைவாக இறைவன் தன்னுள் எடுத்துக் கொண்டார். எனஎண்ணும் போது ஆச்சரியப்படுகின்றோம்.

அமைதியின் உறைவிடமாய் அடக்கத்தின் நிலைகளமாய் விளங்கியவர். தனது குழந்தைகளுடனும் கணவரோடும் ஆலயத்திற்கு வந்து செல்லும் காட்சி எப்பொழுதும் கண்முன் நிற்கின்றது.தனது அலுவலகம் இடம் பெயர்ந்து தரும புரத்தில் இயக்கிய போது தன் பணியை இடைவிடாது தொடர்ந்து பணிக்காக பிரயாணம் செய்த போது காலன் அவரைப் பறித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான் இத் துயரச் செய்தி கேட்டு கலங்காதவர் எவரும் இல்லை. அவரது குழந்தைகள் கணவர், ஹெற்றோர்களுக்கு ஆறதல் அறிப்பவர் யார் எனக் கலங்குகின்றோம். ஒரு சுத்த ஆத்மா தான் வணங்கும் இரட்டைக்கேணி அம்பாள் மீது ஆறாக் காதல் கொண்டவர். அவரோடு சங்கமமாகி உள்ளார் என்ற வகையில் நாம் அமைதியடைவோம். மனதிப் பிறப்பின் பெரும்பயனை வாணி பெற்றுள்ளார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர் அனைவருக்கும் எனது அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பெரிய பளை,
பளை.
30.:.04.:.2007.

ப.அரியரத்தினம்.
வலயக் கல்விப் பணிப்பாளர்.
முல்லைத் தீவு.

# அன்பால் பண்பால் உயர்ந்தவர்

"தோன்றில் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க புகழோடு தோன்றியவரே திருமதி கனகாம்பிகை சிறிகரன் ஆவார் அன்பால் பண்பால் உயர்ந்து "மேன்மைகொள் சைவநீதி"என்ற குறிக்கோளைக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர்.

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் மக்கள் சேவையே மகேசன் சேவையென செய்யும் பச்சிலைப்பள்ளிப் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் 01-08-1995ம் ஆண்டில் எழுத்துனராக தன்னை இனைத்துக் கொண்டார் எமது சங்கத்தின் சிறந்தவொரு பணியாளர் என்பதுடன் தனக்கு கொடுக்கப்பட்ட கடமையை மிகவும் திறமையாகவும் பொறுப்புணர்வுடனும் உரிய நேரத்தில் செய்து முடிப்பவர் அத்துடன் எவருடனும் சிரித்த முகத்துடன் சந்தோசமாக பழகும் சுபாவம் கொண்டவர் எதையும் நேரடியாகக் கூறும் இயல்பு கொண்டவர் சகபணியாளருக்காகவும் தனது கடமைக்குமேல் உதவி செய்யும் இயல்பு கொண்டவர்.

சங்கத்தின் வளர்ச்சியில் தன்னையும் இணைத்துக் கொண்டவர் சகபணியாளராய் வாணி என செல்லமாக அழைக்கப்பட்டவர் சங்கத்தின் இடப் பெயர்வு காரணமாக தர்மபுரத்தில் இயங்கிய போதும் தனது பணியை தொடர்ந்தார் இப்படியான நிலையில் காலன் அவரை எம்முடன் இருந்து பிரித்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான ஓர்பணியாளரின் இழப்பு ஈடுசெய்ய முடியாது. என்பதுடன் அவரை பிரிந்து துயரடைந்துள்ள குடும்பத்தவர் அனைவருக்கும் எனது அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

தம்பகாமம்,
பளை.
30-04.2007.

சி. வதனராசா
தலைவர்.
பச்சிலைப்பள்ளி பலநோக்கு
கூட்டுறவுச் சங்கம்.
பச்சிலைப்பள்ளி.

# அம்பாளின் பாதக் கமலங்களில் அணையாத தீபமாய்

பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் சிகரமென பிரகாசித்து விளங்குகின்ற எல்லாம் வல்ல இரட்டைக்கேணி கண்ணகை அம்பாளின் மணிஓசை கேட்டிடும் பெரியபளையினில் அவதரித்து அம்பாளது நாமங் கொண்ட அமரர் கனகாம்பிகை சிறிகரன் அவர்கள் செல்லாலும், செயலாலும் அன்பாலும் அனைவரையும் கபர்வார்.

இவ் ஆலயத்தின் ஆரம்ப ஸ்தாபகரும், தர்மகர்த்தாவாகவும் விளங்கிய அமரர் செல்லத்துரை அவர்களின் பேர்த்தியும் தற்போதைய தர்மகர்த்தாவும், பரிபாலன சபைத்தலைவருமாகிய திரு. செ. கந்தசாமி அவர்களின் சிரேஸ்ட புத்திரியும், நித்திய அர்ச்சகர் திரு. செ. கனகசபை அவர்களின் பெறாமகளுமாவார்.

கல கலவென கதைபேசி எவர்மனமும் புண்படாத வகையில் பழகிடும் கனகாம்பிகை அனைவராலும் அன்புடன் செல்லமாக வாணியென அழைக்கப்படுவார். அன்பான கணவன் பிள்ளைகளுடன் அம்பாளின் ஆலயத்திற்கு வரும் காட்சி கண்முன் நிழலாடுகின்றது.

அம்பாளது ஆலய வருடாந்த உற்சவ காலங்களிலும் விஷேட தினங்களிலும் நடைபெறுகின்ற அன்னதானம், மற்றும் தொண்டுகள் யாவற்றிலும் முக்கிய பொறுப்பேற்று நடாத்தி முடிப்பதனையும், அவரது வழிபாட்டினையும் மறக்க முடியாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிகு கணவனையும், பச்சிளஞ் செல்வங்களையும் பார்த்திட வேண்டுமென இடம்பெயர்ந்திருந்தபோதும் பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ.சங்கமதில் பணியாளராக கடமைபுரிந்த வாணி அனைத்து பணியாளர்களடனும் அன்புடன் பழகுவார். காலையில் கடமைக்குச் செல்வதற்கு தன் செல்வங்களுக்கு கையசைத்து வழமைபோல் மாலையில் வந்துசேர்வேன் உங்களிடமென்று விடைபெற்ற வாணி சிரித்த முகத்துடன் தினமும்போல் அனைவருடனும் அளவளாவி தன் பணிமுடிய வீடு நோக்கி பயணத்தைத் தொடரும் வேளை காலனும் அதே ஊர்தியில் தொடர்ந்து வாணியின் உயிரைப் பறித்துக் கொண்டான்.

கன்றினைத் தேடிடும் பசுவைப்போல் மலையில் தன் செல்வங்களிடம் ஓடிவரும் வாணி வாய்பேசா மௌனியாக மீளாய்த் துயில்கொண்டு இலலம் வந்தகாட்சி பெற்றோர். உடன்பிறப்புக்கள், கட்டிய கணவன் அன்புச் செல்வங்கள், உறவினர் மனங்களை உலுக்கிவிட்டது. எப்படி நாம் ஆறதல் கூறுவொம் அவர்களுக்கு

பிறந்தவர் இறப்பது இறைவனது நியதி. இதன்படியே வாணியின் வாழ்க்கையும் அமைந்து விட்டது. அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தவர் அனைவர்க்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எந்நாளும் தாயே நீயென இருகரம் கூப்பித் தொழுதிடும் வாணியின் ஆத்மா உன் பாதார வித்தத்தில் அணையாத தீபமாய் பிரகாசிக்க இரட்டைக்கேணி தாயே உன் தாழ் பணிந்து இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பெரிய பளை,
பளை.

பரிபாலன சபையினர்
இரட்டைக்கேணி கண்ணகை
அம்பாள் ஆலயம்.
பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகலகலாவல்லி மாலை

வெண்தா மரைக்கு அன்றி நின்பதம்
தாங்களென் வெள்ளை யுள்ளத்
தண்தா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற் கவியும்
பாடும் பணியில் பணித்தருள்
வாய்பங்கய ஆசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செந்தமிழ் தெள்ளமுது
ஆர்த்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கு என்றுகூடும்கொ
லோஉள்ளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொல்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வடநூல் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற்
பாதபங் கேருகம் என்
நெஞ்சத் தடத்துஅல ராததுஎன்
னேநெடுந் தாள்கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசுஒத்து இருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல்
காய்எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலுமதும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்
காய்உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சொல்லிற் பனமும் அவதான
மும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்
வாய்தளின ஆசனம் சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒருகால
மும்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலம் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல கோடிஉண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த. சாதாரண மாணவர்களுக்காக கணித வாய்பாடுகள் சில............

$(a+b)^2 \quad = \quad a^2 + 2ab + b^2$

$(a-b)^2 \quad = \quad a^2 - 2ab + b^2$

$a^2 - b^2 \quad = \quad (a-b)\ (a+b)$

$(a+b)^3 \quad = \quad a^3 + 3a^2b + 3ab^2 + b^3$

[redacted] = [redacted]

$a^3 + b^3 \quad = \quad (a+b)\ (a^2 - ab + b^2)$

$a^3 - b^3 \quad = \quad (a-b)\ (a^2 + ab + b^2)$

கூட்டல் தொடர் ஒன்றின் nம் உறுப்பு காண்பதற்கு

$T_n = a + (n-1)d$ = a - முதல் உறுப்பு
d - பொதுவித்தியாசம்
n - உறுப்புக்களின் எண்ணிக்கை.

கூட்டல் தொடர் ஒன்றில் nம் உறுப்பின் கூட்டுத் தொகை காண்பதற்கு.

$S_n = n/2\,(a + l)$ = a - முதலாம் உறுப்பு
= l - கடைசி உறுப்பு
= n - உறுப்புக்களின் எண்ணிக்கை.

$S_n = n/2\,(2a + (n-1)d)$ = a - முதலாம் உறுப்பு
= d - பொதுவித்தியாசம்
= n – உறுப்புக்களின் எண்ணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கல் விருத்தியின் nம் உறுப்பு காண்பதற்கு

Tn = arn-1 = a- முதலாம் உறுப்பு.

r-பொதுவிகிதம்.

n- உறுப்புக்களின் எண்ணிக்கை.

பெருக்கல் விருத்தியின் nம் உறுப்பின் கூட்டுத்தொகை காண்பதற்கு.

$$S_n = \frac{a(1-r^n)}{(1-r)}$$

=a- முதலாம் உறுப்பு

r- பொது விகிதம்

n- உறுப்புக்களின் எண்ணிக்கை.

(r<(1) ஆகஉள்ள சந்தர்ப்பம்)

$$S_n = \frac{a(r^{n-1}-1)}{(r-1)}$$

=a-முதலாம் உறுப்பு

r- பொதுவிகிதம்

n- உறுப்புக்களின் எண்ணிக்கை.

(r, (1) ஆக உள்ள சந்தர்ப்பம்)

## புற்றுநோய் பற்றிய சில தகவல் துளிகள்

புற்று நோய் என்றால் என்ன?

இது உடல் கலங்கள். உடலில் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக அசாதாரண முறையல் பெருக்கமடைவதால் ஏற்ப்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம் இது உடலில் எப்பகுதினலும ஏற்ப்படலாம்

இலங்கையில் புற்றுநோய்

இலங்கையில் புற்று நோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது ஒரு வருடத்தில் சுமார் 12000புதிய புற்று நோயாளர்கள் இனம் காணப்படுகின்றனர் பெரும்பாலானோர் பிந்திய நிலையிலேயே வருகின்றார்கள் என்பது குறிப்பிடதக்கது ஆண்களில் தொண்டைப் புற்று நோய் அதிக அளவில் ஏற்ப்படுகிறது பெண்களில் மார்பகப் புற்று நோய் அதிக அளவில் ஏற்ப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007ம் ஆண்டு நடைபெற்று முடிந்த உலக கிண்ண கிரிக்கற் போட்டி நிகழ்வுகளில் சில

2007ம் ஆண்டிற்கான உலககிண்ண கிரிக்கெற் போட்டி மேற்கிந்தியத்தீவில் இடம் பெற்றது.

இப்போட்டியில் அயர்லாந்து, பேர்டா அணிகள் புதிகாக சேர்க்கப்பட்டன.

முதல் முதல் மேற்கிந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் போட்டி ஆரம்பமாகியது.

ஒரே "over" ரில் தென்னாபிரிக்கா வீரர் கிப்ஸ் 6பந்துகளுக்கும் 36ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தார்.

இலங்கை அணியின் அதிவேக பந்து வீச்சாளர் லசித் மலிங்கா தொடர்ந்து 4பந்துகளில் 4விக்கற்றுக்களை தென்னாபிரிக்காவிற்கு எதிராக எடுத்து சாதனை படைத்தார்.

இம் முறை இறுதிப் போட்டிக்கு இலங்கை, அவுஸ்ரேலியா அணிகள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் அவுஸ்ரேலிய அணி உலக கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அவுஸ்ரேலிய அணி தொடர்ச்சியாக மூன்று உலக கிண்ணத்தைக் கைப்பற்றி கற்றிக் சாதனை படைத்ததுடன் 4ம் உலக சாதனையை பெற்ற அணியாகவும் திகழ்கின்றது.

2011ம் ஆண்டு இலங்கை, இந்தியா பாகிஸ்தான், பங்காளதேஸ் ஆகிய தெற்காசிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து உலக கிண்ணப் போட்டியை நடாத்த்த உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு நிறைவு விழாக்கள்.

1ம் ஆண்டு நிறைவு - காகித விழா

2ம் ஆண்டு நிறைவு - பருத்தி வழா

3ம் ஆண்டு நிறைவு - தோல் விழா

4ம் ஆண்டு நிறைவு - பூ,பழ விழா

5ம் ஆண்டு நிறைவு - மர விழா

6ம் ஆண்டு நிறைவு - இரும்பு விழா

7ம் ஆண்டு நிறைவு - கம்பளிழச செம்பு விழா

8ம் ஆண்டு நிறைவு - வெண்கல விழா

9ம் ஆண்டு நிறைவு - மண்கல விழா

10ம் ஆண்டு நிறைவு - தகரழச அனுமிரிய விழா

20ம் ஆண்டு நிறைவு - பீங்கான் விழா

25ம் ஆண்டு நிறைவு - வெள்ளி விழா

50ம் ஆண்டு நிறைவு - பொன் விழா

60ம் ஆண்டு நிறைவு - வைரமணி விழா

75ம் ஆண்டு நிறைவு - பவள விழா

80ம் ஆண்டு நிறைவு - அமுத விழா

100ம் ஆண்டு நிறைவு - நூற்றாண்டு விழா

1000ம் ஆண்டு நிறைவு- மல்லேனியம் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு - ஆனால் அடிமையாகி விடாதே.

இரக்கங் காட்டு - ஆனால் ஏமாந்து போகாதே.

கண்டிப்பாய் இரு - ஆனால் கோழையாய் இராதே.

சிக்கனமாய் இரு - ஆனால் கஞ்சனாய் இராதே.

வீரனாய் இரு - ஆனால் போக்கிரியாய் இராதே.

சுறுசுறுப்பாய் இரு - ஆனால் பதட்டப்படாதே.

தர்மம் செய் - ஆனால் ஆண்டியாகிடாதே.

பொருளைத் தேடு - ஆனால் பேராசைப்படாதே.

உழைப்பை நம்பு - ஆனால் கடவுளை மறந்திடாதே.

## முக்கிய மூன்று(கள்)

01) மதிக்க வேண்டிய மூன்று -முதியவர், மார்க்கம், சட்டம்.

02) நேசிக்க வேண்டிய மூன்று -நேர்மை, தூய்மை, கடினஉழைப்பு

03) போற்ற வேண்டிய மூன்று -திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி

04)தவிர்க்க வேண்டிய மூன்று -புகைத்தல், மதுவருந்தல், சூதாடல்.

05) கட்டாயம் கவனிக்க வேண்டிய மூன்று -பேச்சு, நடைமுறை, செயல்கள்.

06) ஆதரிக்க வேண்டிய மூன்று -வாக்குறுதி, நட்பு, பண்பு.

07) ஒழிக்க வேண்டிய மூன்று -திருட்டு, சோம்பல், பொய்.

08) விரும்ப வேண்டிய மூன்று -கருணை, நற்குணம், மனஅமைதி.

09) போரிட வேண்டிய மூன்று -தேசம், கண்ணியம், கட்டுப்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய்க்கான காரணிகள் யாவை?

புற்றுநோய்க்கான சரியான காரணிகள் எவையென இன்னமும் கூறமுடியாதுள்ளது எனினும் புற்றுநோய் ஆனது வாழ்க்கைமுறை பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத்தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

எனின் பல பாதகமான காரணிகள் புற்று நோய் ஏற்படுவதற்கு துணையாக உள்ளன என இமைகானப் பட்டுள்ளது.

### பாதகமான காரணிகள்

1) புகையிலை பாவித்தல்

2) குடிவகை

3) உணவுப்பழக்கம் (சூடான உறைப்பான, கொழுப்புக் கூடிய நார்த்தன்மை குறைந்த உணவுவகைகள் உண்ணுதல்)

4) வாய் சுகாதாரம் இன்மை.

5) இரசயான பதார்த்தங்கள்.

6) பெண்கள் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவித்தல் மார்பக புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

7) சூரியனில் இருந்து வரும் uv கதிர்கள் மற்றும் ஒசோன் படலத்தின் உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக் கதிர்கள்.


8) அணுக்கதிர்கள்.

9) நெருங்கிய உறவினர்கள். (குடல், இரத்தபுற்றுநோய் பரம்பரை அலகுகளால் கடத்தப்படுகின்றன.)

10)நல்ல உடற் பயிற்சி இன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்



பொன்னுத்துரை + செல்லம்மா
(அமரர்)
கந்தசாமி + மனோன்மணி
தர்மநாயகி
+
குலசிங்கம்
பரமேஸ்வரி
+
செல்வம்
திவ்வியராணி
+
கிருஸ்ணகுமார்
சிவமலர்
+
மகேந்திரம்
சிறிகரன்
கனகாம்பிகை
அனுஷாம்பிகை
+
செல்வராசா
சபேசன்
சுலக்ஷன்
ராதிகா
+
பிரபாகரன்
பிரியங்கா
+
பிரபாகரன்
மாதுளா
திவாகரன்
ரம்சி
வேனுயன்
கவிதா
+
லசிங்கமிகாந்தன்
குணசீலன்
+
நிரஞ்சா
பிரதீபன்
வனிதா
+
கஜன்
லக்சனா
சகானா
சபீனா

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்


உய்வில்லை செய்நன்றி கொண்ற மதற்கு"

எமது அன்புத் தெய்வம் அமரர் திருமதி சிறிகரன் கனகாம்பிகை அவர்கள் 04-03-2007 அன்று அம்பாள் அடி எய்திய செய்தி கேட்டு உடன் வந்து உதவி செய்தோற்கும் அனுதாபச் செய்தி தெரிவித் தோருக்கும், எம்முடன் இருந்து துயர் பகிர்ந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். தற்காலிகமாக இடம்பெயர்ந்திருந்த இல்லத்தில் மரணச் சடங்கினைச் செய்ய உதவிய குமரசாமி புலவர் குடும்பத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு மரணத்தில் இருந்து மையம் மயாணம் செல்லும் வரை சகலவிதமான செலவுகளை ஏற்று செய்ததோடு சரீர உதவிகளை மனமுவந்து செய்த பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்க தலைவர், பனிப்பாளர் பணியாளர்களுக்கும் எமது அன்பையும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் அன்றைய தினம் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும், இறுதி தீர்ச் சடங்கு சபிண்டி கரணம் போன்றவறை நடாத்திய குருமார்கட்கும் இவ் அழகிய நூலினை அச்சிட்ட ஸ்ரீ ஆதவன் அச்சகத்தினருக்கும், துதிப்பாக்கள் இரங்கல் பாக்களை யாத்து உதவிய திரு வ. ஜீவரத்தினம் கிளி/ முகாவில் அ. த. க. பா. அதிபர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.


வணக்கம்

பெரிய பளை,
பளை.



இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கணனி அச்சுப்பதிப்பு : ஸ்ரீ ஆதவன் அச்சகம்**

இல:50, மில் றோட், வவுனியா.

தொலைபேசி இல:024-2223958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஆதவன் அச்சகம் மில் வீதி வவுனியா.